# மத்தேயு நற்செய்தி தொடர்வினா விடைப் போட்டி

# (அதிகாரம் 8~9)

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்

1.மத்தேயு எட்டாம் அதிகாரத்தில் ''நான் விரும்புகிறேன், உமது நோய் நீங்குக'' என்று இயேசு யாரிடம் முதன் முதலில் கூறினார்?

1. தொழுநோயாளர்
2. முடக்குவாத நோயாளா
3. பிணியாளர்
4. குருடர்

2. ஐயா, நீர் என் வீட்டிற்குள் அடியெடுத்து வைக்க நான் தகுதியற்றவன்'' என்று சொன்னவர் யார்?.

1. மறைநூல் அறிஞர்
2. பரிசேயருள் ஒருவர்
3. நூற்றுவர் தலைவர்
4. பேதுரு

3. உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்: இஸ்ரேயலர் யாரிடமும் இத்தகைய நம்பிக்கையை நான் கண்டதில்லை என்று இயேசு வியந்து கூறிய நபர் யார்?

1. ஆபிரகாம்
2. யாக்கோபு
3. நூற்றுவர் தலைவர்
4. மாற்கு

4. இயேசு அவரது கையைத் தொட்டதும் காய்ச்சல் குணமாயிற்று அவர் யார்?

1. பேதுருவின் மாமியார்
2. பேதுருவின் தந்தை
3. அந்திரேயாவின் தந்தை
4. லூக்காவின் தாய்

5. ''அவர்தம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார். நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார்'' என்று இயேசுவை எந்த இறைவாக்கினர் கூறினார்?

1. எசேக்கியேல்
2. எரோமியா
3. எசாயா
4. திருமுழுக்கு யோவான்

6. காற்றையும் கடலையும் முதன் முதலில் அடக்கியவர் யார்?

1. தூய ஆவி
2. பேதுரு
3. இறைமகன் இயேசு
4. புனித சின்னப்பர்

7. இயேசு, "நம்பிக்கை குன்றியவர்களே ஏன் அஞ்சுகிறீர்கள" என்று யாரைப் பார்த்து கூறினார்?

1 சீடர்கள்
2. பெரும் திரளான மக்கள்
3. பரிசேயர், சதுசேயர்
4. யூத மக்கள்

8. தாவீதின் மகனே, எங்களுக்கு இரங்கும் என்று கத்திக் கொண்டே வந்தவர்கள் யார்?

1. பார்வையற்றோர் இருவர்
2. பெரும் திரளான மக்கள்
3. தொழுநோயாளர்கள்
4. இயேசுவின் சீடர்கள்

9. நீர் எங்களை ஓட்டுவதாயிருந்தால் அப்பன்றிக் கூட்டத்திற்குள் எங்களை அனுப்பும் என்று இயேசுவிடம் கேட்டுக் கொண்டவர்கள் யார்?

1. பேய்கள்
2. மக்கள்
3. மரங்கள்
4. ஆடுகள்

10. மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிட மகனுக்கு அதிகாரம் உண்டு என்று இயேசு யாரிடம் கூறினார்?

1. மறைநூல் அறிஞர்கள்
2. சீடர்கள்
3. தன் தாயிடம்
4. லாசரிடம்

## II. பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. நோயற்றவர்க்கு அல்ல | ~ | மகளே துணிவோடிரு உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று |
| 2. பலியை அல்ல | ~ | புதிய மதுவைப் புதிய தோற்பைகளில்தான் ஊற்றி வைப்பர். |
| 3. நேர்மையாளரை அல்ல | ~ | நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை. |
| 4. மணமகன் தங்களோடு இருக்கும்வரை மணவிருந்தினர்கள் துக்கம் கொண்டாட முடியுமா | ~ | இரக்கத்தையே விரும்புகிறேன். |

5. பழைய ஆடையில் புதிய துணியை ஒட்டுப் போடுவதில்லை. ~ பாவிகளையே அழைக்க வந்தேன்

6. பழைய தோற்பைகளில் புதிய திராட்சை மதுவை ஊற்றி வைப்பதில்லை ~ மணமகன் அவர்களைவிட்டுப் பிரிய வேண்டிய காலம் வரும் அப்போது அவர்களும் நோன்பு இருப்பார்கள்.

7. நான் அவருடைய ஆடையைத் தொட்டாலே போதும் நலம் பெறுவேன் ~ அந்த ஒட்டு ஆடையைக் கிழித்துவிடும் கிழிசலும் பெரிதாகும்.

## III. சரியா அல்லது தவறா

1. சுங்கச்சாவடியில் வேலை செய்தவரைக் கண்டு, ''என்னைப் பின்பற்றி வா''என்று இயேசு அழைத்தவர் யோவான். ( சரி அல்லது தவறு )

2. என் மகள் இப்பொழுதுதான் இறந்தாள் ஆயினும் நீர் வந்து அவள் மீது உம் கையைவையும் என்று இயேசுவிடம் கேட்டவர் பேய் பிடித்தவர். ( சரி அல்லது தவறு )

3. ''நான் அவருடைய ஆடையைத் தொட்டாலே போதும் நலம் பெறுவேன் என்று கூறியப் பெண் பத்து ஆண்டுகளாய் பிணியுற்று இருந்தார். ( சரி அல்லது தவறு )

4. தொழுகைக் கூட்டத் தலைவரின் மகளை இயேசு உயிர்பெறச் செய்தார் ( சரி அல்லது தவறு )

5. தாவீதின் மகனே, எங்களுக்கு இரங்கும் என்று கத்திக் கொண்டே வந்தவர்கள் பார்வையற்றோர் ( சரி அல்லது தவறு)

## IV. சரியான விடையை கோடிட்ட இடங்களில் எழுதவும்

தொழுகை கூட்டங்களில் கற்பித்தார், விண்ணரசைப்பற்றிய நற்செய்தியைப் பறை சாற்றினார், நோய் நொடிகள் அனைத்தையும் குணமாக்கினார், பரிசேயர், அறுவடை, ஆடுகளைப், பரிவு கொண்டார், மன்றாடுங்கள், பார்வையற்றோர் இருவர்.

1. திரண்டிருந்த மக்களை இயேசு கண்டபோது அவர்கள் மேல் ~~~~~~~~~~~~~~~~~~~~~

2. ஆயர் இல்லா ________________ போல் அலைக்கழிக்கப்பட்டு சோர்ந்து காணப்பட்டார்கள்

3. ______________மிகுதி. வேலையாள்களோ குறைவு

4. தேவையான வேலையாள்களைத் தமது அறுவடைக்கு அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் ~~~~~~~~~~~~~~~~~~~

5. இவன் பேய்களின் தலைவனைக் கொண்டு பேய்களை ஓட்டுகிறான் என்று இயேசுவைப் பார்த்து கூறியவர்கள் ~~~~~~~~~~~~~~~~~~

6. இயேசு அவர்களைப்பார்த்து, ''நான் இதைச் செய்ய முடியும் என நம்புகிறீர்களா'' என்று யாரிடம் கேட்டார் ~~~~~~~~~~~~~~~~~~~

7. இயேசு செய்த முக்கிய பணிகள் ~~~~~~~~~~~~~~~~, ~~~~~~~~~~~~~~~~~~. ~~~~~~~~~